Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 13, 2021

திங்கட்கிழமை டிசெம்பர் 13, 2021 | ஒளி: 07 கதிர்: 177 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ‘ஆசியாவின் ராணி’ கண்டெடுப்பு



உலகின் மிகப்பெரிய இயற்கையான ஒற்றை நீல இரத்தினக்கல், இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்தது.

இரத்தினபுரி, பட்டுகெதர பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இந்த இரத்தினக்கல்லுக்கு தொடர்ச்சி P2

சம்பந்தன், மனோ, ஹக்கீம், சி.வி

# 13க்கு அழுத்தம்



அரசாங்கத்தின் நிலைப்பாடு

## கடும்போக்காக மாறும்

### அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் தெளிவில்லை என்கிறார் சம்பந்தன்

**13ஆவது திருத்தத்தின் சில சரத்துகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது**

*மகேஸ்வரி விஜயனந்தன்*



இன்றைய அரசியல் சூழலில், விசேடமாக புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஒரே நாடு ஒரே சட்டம் என்று அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடு, கடும் போக்காக மாறுவதற்கு இடமுள்ளதில் சந்தேகமில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## கோட்டாவுக்கு மனோ சவால்

**13ஆவது திருத்தம் தமிழ்பேசும் மக்களின் இறுதி இலக்கு என எம்மால் கருதப்படவில்லை**

*மகேஸ்வரி விஜயனந்தன்*



“உண்மையில் 13ஆவது திருத்தம் என்பது புதிதாகக் கோரிக்கை விடுக்க வேண்டிய விடயம் அல்ல. அது இலங்கையின் அரசியலமைப்பில் ஏற்கெனவே இருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, இன்றைய அரசியலமைப்புக்குள் இருக்கின்ற இந்தச் சட்டத்தை அமல்படுத்திக் காட்டுமாறு சவால் விடுக்கின்றோம்” என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## அதிகாரப் பகிர்வை அமல்படுத்தவும்

**ஆளுநர்களின் மாகாண ஆட்சி, சிறுபான்மை சமூகங்களுக்கு பாதிப்பாக அமையும்**

*மகேஸ்வரி விஜயனந்தன்*



சிறுபான்மை சமூகத்துக்கான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளில் அரசாங்கம் முன்னெடுக்கும் இழுபறிகள், இழுத்தடிப்பு நடவடிக்கைகளை எல்லாம் நாம் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்றால், இந்த அரசியலமைப்பில் இருக்கின்ற அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் அமல்படுத்தப்பட வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## தீர்வை கைவிடோம்

**தற்போது இருக்கும் சட்டத்தின் மூலம் காணிகளைப் பாதுகாக்க வேண்டும்**

*மகேஸ்வரி விஜயனந்தன்*



நாம் அரசியல் தீர்வாகக் கூட்டு சமஷ்டியைக் கைவிட்டு விட்டோம் எனப் பலரும் விமர்சிக்கின்றனர். ஆனால், அது அவ்வாறல்ல; சமஷ்டி தீர்வு எமது குறிக்கோளாக எப்போதும் இருக்கும் எனவும் அதனை ஒரு காலத்தில் எடுத்தே தீர்வோம் எனவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

மதத் தலைமை

## அரசியலுக்கு அடிபணிதல் மதத் துரோகம்



மதத் தலைமை எப்போதும் சுதந்திரமாக இருக்க வேண்டும். அரசியலுக்கு அடிபணிந்து மதக் கோட்பாடுகளை தூக்கி எறியக்கூடாது. அது மதத்துரோகம் என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தினார். தொடர்ச்சி P2

## “கேட்டால் இந்தியா எமக்கு உதவும்”

### எதிர்க்கட்சி தெரிவிப்பு



தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்கள், மருந்துகள், எரிபொருள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு இந்தியாவின் உதவியை அரசாங்கம் பெற வேண்டும் என்று எதிர்க்கட்சி கூறுகிறது. தொடர்ச்சி P2

நுவரெலியா பிரதேசத்தில்

## கேபிள் கார் திட்டம்



நுவரெலியா பிரதேசத்தில் கேபிள் கார் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் ஸ்வீடன் நாட்டு நிறுவனத்துடன் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

இரண்டு கட்டங்களைக் கொண்ட கேபிள் கார் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 18 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சி P2

அமெரிக்க நிறுவனத்துடனான

## ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தவும்



அரசாங்கத்தின் கௌரவத்தையும் மக்களின் நம்பிக்கையையும் பாதுகாக்கும் வகையில், நியூ புரோட்டானுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

அமைச்சரவைக் கூட்டத்துக்கு

## மத்திய வங்கி ஆளுநருக்கும் ஆட்டிகலவுக்கும் அழைப்பு

ஜனாதிபதியின் தலைமையில் இன்று திங்கட்கிழமை (13) நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்துக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2

## மீண்டும் சபைக்கு செல்லும் எண்ணம் இல்லை

### நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



மீண்டும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எண்ணம் இல்லை எனவும் பாராளுமன்றத்தில் இருப்பதை விட சட்டத்துறையில் ஈடுபடுவதையே விரும்புவதாகவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

சட்டத்தரணி பிரேமரத்ன ஜயசிங்கவால் எழுதப்பட்ட குற்றவியல் சட்டம் தொடர்பான நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்ட தொடர்ச்சி P2

பண்டிகைக் காலத்தில்

## சதொச ஊடாக மக்களுக்கு நிவாரணம்



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சந்தை விலையை விட குறைந்த விலையில் 50 பொருட்களை லங்கா சதொச ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகை, புத்தாண்டை கருத்திற்கொண்டு, நாடளாவிய ரீதியிலுள்ள சதொச விற்பனை நிலையங்கள் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் தொடர்ச்சி P2



## கூட்டொப்பந்தம் மீண்டும் வேண்டுமென ஆர்ப்பாட்டம்

*பி.கேதீஸ்*

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டுமாயின், கூட்டொப்பந்தம் மீண்டும் செய்துகொள்ளப்படவேண்டுமென வலியுறுத்தி, தலவாக்கலை- லிந்துலை நகரில் தோட்ட கமிட்டி தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் நேற்று (12) ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை தொடர்ச்சி P2

## கடவையில் ஓட்டோவை பந்தாடிய வடக்கு ரயில்

*க. அகரன்*

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியிலுள்ள ரயில் கடவையில் சிக்கிக்கொண்ட ஓட்டோவை, ரயில் பந்தாடிய சம்பவமொன்று நேற்று (12) இடம்பெற்றது. எனினும், ஓட்டோவின் சாரதி அதிர்ஷ்டவசமாக தப்பித்துக்கொண்டார்.

தாண்டிக்குளம் ரயிவே கடவையிலேயே இச்சம்பவம் நேற்று (12) காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2



பூஸ்டரை பெறாவிடின்

## ‘கொரோனா சுனாமி’க்கு தயாராகுங்கள்

### இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை; 20 வயதுக்கு மேற்பட்டோருக்கும் பூஸ்டர்

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பயணிப்பதற்கு முன்னர், கொரோனா தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் அல்லது பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்ளுமாறு ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கேட்டால் இந்தியா எமக்கு உதவும்

இலங்கைக்கு இந்தியா எப்போதும் நண்பன் என்றும், உதவி கோரப்பட்டால் உதவி செய்யும் என்றும் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு சர்வதேச பங்காளிகளின் உதவி இலங்கைக்கு தேவைப்படும் என்பதால் அடுத்த சில மாதங்கள் முக்கியமானதாக இருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

செலுத்துவதைக் கௌரவிக்கும் வகையில் இலங்கையின் கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்பதை அரசாங்கம் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும், எனவே சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை அரசாங்கம் தவறவிட்டதாகவும் சர்வதேச பங்காளிகளின் உதவியையும் பெறுவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் ஹர்ஷ எம்.பி சுட்டிக்காட்டினார்.

# கடவையில் ஓட்டோவை பந்தாடிய வடக்கு ரயில்

ஓமந்தை பகுதியில் இருந்து பயணித்த ஓட்டோ, தாண்டிக்குளம் ரயில்வே கடவையை கடக்கத் முற்பட்டபோது, இயந்திர கோளாறால், ரயில் கடவையை கடக்கமுடியாது தண்டவாளத்தில் சிக்கிக்கொண்டது. ரயிலொன்று வருவதை கண்ட ஓட்டோ சாரதி, ஓட்டோவிலிருந்து பாய்ந்து தப்பிக்கொண்டார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரயிலே ஓட்டோவை மோதியுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

# மத்திய வங்கி ஆளுநருக்கும் ஆட்டிகலவுக்கும் அழைப்பு

நாட்டின் அந்நியச் செலாவணி மற்றும் நாணயக் கையிருப்பு நிலைவரம் குறித்து விசாரிப்பதற்காகவே இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று அறியமுடிகிறது.

வரவு செலவுத் திட்டத்துக்குப் பின்னர் நடைபெறும் முதல் அமைச்சரவை கூட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியை தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரை அமைச்சரவைக்கு அழைக்குமாறு அரசாங்க அமைச்சர்கள் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக பொருளாதாரத்தில் பல பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

டொலர் நெருக்கடிக்கு தீர்வுகாண அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனவும் அதற்கு முன்னதாக அமைச்சர்களுக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் எனவும் அமைச்சர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சதொச ஊடாக...

செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரிசி போன்ற பொருட்களை வழங்குவதற்கு அண்மைக்காலமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், பண்டிகைக் காலங்களில் அந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசி ரூ.99.50 க்கும், ஒரு கிலோ கிராம் சுப்பிரி சம்பா அரிசியை ரூ.130க்கும், ஒரு கிலோ கிராம் சீனியை ரூ.125க்கும் வாங்கலாம் என்றார்.

நாடளாவிய ரீதியில் உள்ள லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக நாட்டில் கிடைக்கும் 50 அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கொரோனா சுனாமிக்கு தயாராகுங்கள்

பூஸ்டர் டோஸைப் பெறாமல், பல்வேறு ஒன்றுகூடல்களில் மக்கள் தொடர்ந்து ஈடுபட்டால், அது மீண்டும் கொரோனா தொற்றுகளின் பாரிய அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் எச்சரித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற, மக்கள் மத்தியில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் உள்ளது என்றும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறாமல் நீங்கள் அனுபவிக்கப் போகிறீர்கள் என்றால், டிசெம்பர் கடைசி வாரத்தில் கொரோனா சுனாமிக்கு நீங்கள் தயாராக வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, கொரோனாவுக்கு எதிரான இரண்டு தடுப்பூசி டோஸ்களையும் பெற்றுக்கொண்ட 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் டோஸ் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, இரண்டாவது தடுப்பூசியை 3 மாதங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்டவர்கள் பூஸ்டர் டோஸைப் பெறமுடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள எந்தத் தடுப்பூசி மையத்திலும் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேசிய அடையாள அட்டை மற்றும் தடுப்பூசி அட்டையை தடுப்பூசி மையங்களுக்குக் கொண்டு செல்லுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

# ‘ஆசியாவின் ராணி’ கண்டெடுப்பு

ஆசியாவின் ராணி என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன் நிறை சுமார் 1,550,000 கரட் (310 கிலோ கிராம்) என்றும் இரத்தினபுரியில் உள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையின் இரத்தினவியல் ஆய்வகத்தில் மேற்குறிப்பிட்ட கல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அங்கு இரத்தினவியல் வல்லுநர்கள் முழுக் கல் மாதிரியிலும் இருந்து ஐந்து மாதிரிகளை எடுத்து பல இரத்தினவியல் சோதனைகளை மேற்கொண்டனர் என்றும் அதன்படி, ஐந்து மாதிரிகளும் இயற்கையானவை என பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்றும் அதிகாரசபை அறிவித்துள்ளது.

மேலும், இந்த நீலக்கல் ஒரே பாறையால் ஆனது என்பதால் இது ஓர் அரிய மாதிரி என்பது குறிப்பிடத்தக்கது.

# கேபிள் கார் திட்டம்

நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரை 4 கிலோமீற்றர் தூரத்துக்கு இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த கேபிள் கார் பாதையானது, சுவீடன் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் முழுமையாக நிதியளிக்கப்பட்டுள்ளது.

55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 30 ஆண்டு குத்தகைக்கு இந்த திட்டம் உருவாக்கப்படும் என்றும் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# கூட்டொப்பந்தம் மீண்டும் வேண்டுமென ஆர்ப்பாட்டம்

பாதுகாப்பதற்காக கூட்டொப்பந்தம் மீண்டும் வேண்டுமென வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

லிந்துலை, அக்கரப்பத்தனை, மெரயா, டயகம போன்ற பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள தோட்டக் கமிட்டி தலைவர்களால் லிந்துலை நகரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் பங்கேற்று கூட்டொப்பந்தத்துக்காக குரல் எழுப்பினர்.

இ.தொ.காவின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சக்திவேல், இ.தொ.காவின் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட இ.தொ.காவின் பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளை கண்டித்துடன் உரிய வகையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமென குரல் எழுப்பினார்.

கூட்டொப்பந்தம் இல்லாததால்தான் கம்பனிகளின் அடக்குமுறைகள் அதிகரித்துள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர். இதனால் கூட்டொப்பந்தம் மீண்டும் வேண்டுமென இப்போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் வலியுறுத்தினர்.

# அரசியலுக்கு அடிபணிதல் மதத் துரோகம்

பொல்லத்த சேக்ரட் ஹார்ட் தேவாலயத்தில் நேற்று (12) நடைபெற்ற 125ஆவது ஆண்டு பெருவிழாவின் போது உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை பேராயர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டின் மதகுருமார்கள் இன்று அரசியல் கட்சிகளுடன் அமர்ந்திருப்பது புத்திசாலித்தனமான செயல் அல்ல என்று சுட்டிக்காட்டிய அவர், மதத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருக்க முடியாது. அரசியலில் இருந்து முற்றாக விலகி இருக்க வேண்டும் என்றார்.

கிடைக்கும் இலாபத்துக்காக அரசியல் கட்சித் தலைவர்களிடம் சமயத் தலைவர்கள் தலைவணங்கக் கூடாது எனவும் சமூகத்தின் முன் தமது சொந்த மதத்துக்கே செய்யும் துரோகம் எனவும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள் மதத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அரசியல் தலைவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த மதத் தலைவர்களைப் பயன்படுத்தினால், அது அந்த மதத்தை அவமதிக்கும் செயலாகும் என சுட்டிக்காட்டினார்.

நான் ஒரு மதத் தலைவர், அரசியல் இலாபம் மற்றும் இலாபங்களுக்காக எனது சுதந்திரத்தை காட்டிக் கொடுத்தால் நான் வெட்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

# ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தவும்

அவர், நேற்று (12) வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

கெலவரபிட்டிய அனல்மின் நிலையம் உட்பட இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான பல நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனத்துக்கு விற்பனை செய்ததாக கூறப்படும் விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க வெளிப்படுத்திய விடயம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரால் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, மிகவும் பொறுப்புடன் வெளியிடப்பட்ட அறிக்கையாகவே இதனைக் கொள்ளலாம்.

அமெரிக்காவின் நியூ புரோட்டானுக்கு மாற்றுவதற்கு அமைச்சரவைப் பத்திரம் மூலம் முன்மொழியப்பட்ட போதிலும், ஸ்ரீலங்கா பவர் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் நியூ புரோட்டானின் முழு உரிமையாளரா அல்லது கூட்டு நிறுவனமா என்பதை அறிய பொதுமக்களுக்கு உரிமை உள்ளது.

# கோட்டாவுக்கு மனோ சவால்

இதனை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மனங்களையும் இதயங்களையும் அறிவையும் வெல்லுங்கள் என்றார்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த 13ஆவது திருத்தம் என்பது தமிழ் பேசும் மக்களின் இறுதி இலக்காக எம்மால் கருதப்படவில்லை. ஏதோ இலங்கை அரசாங்கம் 13க்கு அப்பால் சென்று தீர்வுகளைத் தரத் தயாராக இருப்பது போன்றும் அதை வேண்டாமென்று கூறிவிட்டு, கட்சித் தலைவர்களாகிய நாங்கள் 13 போதும் என்ற கூறுவதைப் போன்றும் கருத்து பரிமாற்றம் இடம்பெற்றிருப்பதை நாம் நிராகரிக்கின்றோம்.

இன்று இந்த நாட்டிலே சமகாலத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய ஏற்புடைமை இருக்க கூடிய கட்சிகளின் தலைவர்கள் அதிக எண்ணிக்கையில் கூடிய முதல் நிகழ்வு இது என்றும் இதன் முதல் கூட்டம் நவம்பர் மாதம் முதலாவது வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்த மாதம் 21ஆம் திகதி மீண்டும் ஒன்று கூடி அதன்போது பொது ஆவணமொன்றில் கையெழுத்திட்டு அந்த ஆவணத்தை பகிரங்கபடுத்தி வெளியிட நேற்று (12) நாங்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளோம் என குறிப்பிட்டார்.

# கடும் போக்காக மாறும்

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நாட்டைவிட்டு வெளியேறும் நிலையில், அரசாங்கத்தின் நிலைப்பாடு துப்புரவாக தெளிவின்மையாக இருக்கின்றது. அவர்களின் நோக்கம் என்ன என்பதை தெளிவாக புரிந்துக்கொள்ள முடியாமல் உள்ளது என்றார்.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி, வெள்ளவத்தை- குளோபல் டவர்ஸ் ஹோட்டலில் நேற்று (12) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இன்றைய அரசியல் சூழலில் விசேடமாக புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஒரே நாடு ஒரே சட்டம் என்றொரு கருத்தும் அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடு கடும் போக்காக மாறுவதற்கு இடமுள்ளதில் சந்தேகமில்லை என்றார்.

அவர்களின் போக்கு கடும் போக்காக மாறும் என நாங்கள் சந்தேகிப்பதற்கு போதிய இடமுண்டு. இது தொடர்பில் கவனமாக அவதானித்து வருகிறோம்.

இந்த சூழலில் அனைத்து தமிழ் பேசும் கட்சிகளும் கூடி, தமிழ் பேசும் மக்கள் சார்பாக விசேடமாக வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, எமது மக்களின் தேவைகளை அறிந்து, அதனை ஆராய்ந்து அது தொடர்பில் தீர்மானித்து எவ்விதமான கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பது பின்பற்ற வேண்டும் தொடர்பில் ஆலோசிப்பதே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் என குறிப்பிட்டார்.

# மீண்டும் சபைக்குச் செல்லும்...

விடயத்தைத் தெரிவித்தார். நீதிமன்ற நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்தும் கருத்து வெளியிட்ட அவர், நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வழக்குரைஞர் தொழிலுக்கு பொதுமக்கள் மிக முக்கியமான காரணிகள் என்றும், மக்களின் நலனை கருத்தில் கொள்ளும்போது மற்ற அனைத்து அம்சங்களும் இரண்டாம் பட்சம் என்றும் அவர் கூறினார்.

30 க்கும் மேற்பட்ட குழுக்கள் செயற்படுவதாக கூறி, நாட்டில் சில சட்டங்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக புதுப்பிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

சமூக ஊடகங்கள் ஊடாக மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பித்து வருவதாகவும், பிரதம பீடாதிபதிகள் விசேட நீதிமன்ற முறைமைக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# தீர்வைக் கைவிடோம்

ஆனால், இப்போது இருக்கும் சட்டத்தை நடைமுடைபடுத்தாமல் கடந்த 5 வருடங்களாக மாகாண சபைகளை செயற்படுத்தாது மாகாண சபைக்குரிய அதிகாரங்களை மத்திய அரசாங்கம் தமக்கேற்றவாறு பாவித்து கொண்டிருக்கின்றது என்றார்.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி, வெள்ளவத்தை- குளோபல் டவர்ஸ் ஹோட்டலில் நேற்று (12) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இக்கூட்டத்தின் முக்கிய அம்சம் யாதெனில், முஸ்லிம், மலையகம் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களையும் இணைக்கும் பிணைக்கும் ஒன்று தான் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதால் நாம் அனைவரும் பாதிக்கப்படுகிறோம். 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருவதற்கு தான் இந்த கூட்டம். அது, எங்களுடைய நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு பதிலான ஒன்று அல்ல.

தற்போது நாளாந்தம் மக்கள் நாட்டை விட்டு சென்றுகொண்டிருக்கின்றனர். இடம்பெயர்கின்றனர். இந்த நிலையில் எமது காணிகள் பறிபோகின்றன. வாழ்வாதாரங்கள் பறிபோகின்றன. இந்த நிலையில் தற்போது இருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் எமக்குள்ளது. எமது நிரந்தர சமஸ்டி தீர்வை நாம் கைவிடவில்லை. ஒற்றையாட்சியின் கீழ் எமக்கிருக்கும் உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதற்கு 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தியாவின் ஆதரவு தேவையாக இருக்கின்றது என்றார்.

# அதிகாரப் பகிர்வை அமல்படுத்தவும்

இது சம்பந்தமாக மறைமுகமாக கொண்டு செல்கின்ற நடவடிக்கைகள் மூலம் மாகாண சபைகள் இயங்காமல் இருக்கின்ற தருணத்தை தமக்கு வாய்ப்பாக மத்திய அரசாங்கம் பயன்படுத்தி, பலவிதமான செயலணிகளை அமைத்து, ஜனாதிபதி செயலணி என்ற போர்வையில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்கள் எவையும் உருப்படியாக இல்லாமல் கொண்டு செல்வதற்கு எத்தனிக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி, வெள்ளவத்தை- குளோபல் டவர்ஸ் ஹோட்டலில் நேற்று (12) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இதற்கு தேர்தல் முறையில் கொண்டு வந்திருக்கின்ற இந்த மாற்றத்தை ஒரு சாட்டாகக் கூறிக்கொண்டு தேர்தலை இழுத்தடிப்பு செய்வது என்பதை இனிமேலும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்காக அனைத்து கட்சிகளும் சேர்ந்து தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற தெரிவு குழுவிலும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

பழைய தேர்தல் முறைக்கு உடனடியாகச் சென்று, குறைந்தது அடுத்து வருகின்ற தேர்தலை அவசரமாக நடத்தி முடிக்கலாம் என்பதற்கான எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன.



வவுனியாவில் வனவளத் திணைக்களத்தினர்

# உளுந்து பயிர் நிலத்தில் அட்டகாசம்

வவுனியா, செட்டிக்குளத்தில் தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த காணிகளுக்குள், நேற்று (12) உள்நுழைந்த வனவளத் திணைக்களத்தினர், எல்லைக் கற்களை நட்டு அவற்றைக் கையகப்படுத்தியுள்ளதுடன், பயிர்ச்செய்கையையும் சேதப்படுத்தியுள்ளனர்.

செட்டிகுளம், மெனிக்பாம் கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்காக பயிரிடப்பட்ட உளுந்து பயிர்ச்செய்கையை சேதப்படுத்தி எல்லைக் கற்களை நாட்டி காணிகளை வனவளத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் 850 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரமாக உளுந்து பயிர்ச்செய்கையை பல வருடங்களாக செய்து வருகின்றனர்.

## சுதந்திரக் கட்சியில் கதவடைப்பு

■ என்.ஆராச்சி



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கேகாலை மாவட்ட விசேட பிரதிநிதிகள் கூட்டம் கேகாலை சில்க் ஹோட்டலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று (12) இடம்பெற்றது. இது தொடர்பான செய்தி சேகரிக்க எந்தவோர் ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்க வேண்டாமென தனக்கு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளதாக, இந்தக் கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பாளர் ஊடகவியலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

எனினும், வெளிமாவட்ட ஊடகவியலாளர்கள் சிலருக்கு இது தொடர்பான செய்தி சேகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில், கேகாலை மாவட்ட ஊடகவியலாளர் தொழிற்சங்கம் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் துஸ்மந்த மித்ரபால, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜயசுந்தர இராஜினாமா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தனது பதவியை இராஜினாமா செய்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

அவரது வெற்றிடத்துக்கு முன்னாள் பிரதமரின் செயலாளர் எஸ்.அமரசேகர, நியமிக்கப்படவுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

அமரசேகர, தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக தற்போது பணியாற்றிவருகின்றார். அவர் இலங்கைக்கு மீளவும் அழைக்கப்படவுள்ளார் என அறியமுடிகின்றது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர். இதனையடுத்தே, பி.பீ.ஜயசுந்தர இராஜினாமா செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

## நிதியை மீள செலுத்தாவிடின் ஊ.சே.நி கிடைக்காது

### விரிவுரையாளர்களுக்கு சிக்கல்

கலாநிதி பட்டங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெற்று அதனை மீள செலுத்தாத விரிவுரையாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியை (EPF) வழங்காமலிருப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தமது கலாநிதி பட்டப்படிப்பை இடைநடுவே கைவிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## தூண்டிலில் சிக்கிய குண்டு



யாழ்ப்பாணம் மடம் வீதியில் உள்ளகால்வாய் ஒன்றில் சிறுவர்கள் மீன் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த போது அவர்களது தூண்டிலில் திடீரென ஒரு பாரமான பை அகப்பட்டுள்ளது. அதனைப் பிரித்துப் பார்த்த போது, அதில் வெடி குண்டொன்று இருந்தமை கண்டறியப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், மடம் வீதியிலுள்ள கால்வாய் ஒன்றிலேயே சிறுவர்கள் மீன்பிடித்து விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அதன்போதே, பையொன்று தூண்டிலில் சிக்கியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து, நீதிமன்றத்தின் அனுமதியின் ஊடாக, விசேட அதிரடிப்படையினர் அக்குண்டை மீட்டெடுத்தனர்.

## கைவிலங்கிட்டு கொள்ளையிட்ட முன்னாள் கைதி கைது

பொலிஸார் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட நபரொருவர் கிருலப்பனை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், 34 வயதுடைய ஓட்டோ சாரதி என்றும், அவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பம்பலப்பிட்டி- சென்லாரன்ஸ் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்றுக்குள் இருந்த நபரை பயமுறுத்தி, கைவிலங்கிட்டு அவரிடமிருந்து தங்க நகைகள் மற்றும் பணத்தை பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டன.

கிருலப்பனை- பூர்வாராம பிரதேசத்தில் வைத்து அவரை கைது செய்யும் போது, அவரிடம் 5,900 மில்லிகிராம் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹெரோய்ன் விற்பனை தொடர்பில் சந்தேகநபர், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அங்கிருந்து கைவிலங்கை திருடிக்கொண்டு வந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, சி.சி.ரி. வி காட்சிகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபரிடமிருந்து 1,10,000 ரூபாய் பணமும் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான கார், கத்தி, கைவிலங்கு மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 19 மரணங்கள்; 538 பேருக்குத் தொற்று

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணித்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் பிரகாரம், நேற்றுமுன்தினம் (11) கொரோனாவில் மரணமடைந்தோரின் எண்ணிக்கை 19ஆகும்.

அதில், 30 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் எவரும் மரணிக்கவில்லை. 30 வயதுக்கும் 51 வயதுக்கும் இடையில் மூவர் மரணித்துள்ளனர். அதிலொருவர் ஆண். இதேவேளை, 60 வயதுக்கும் அதற்கு மேலும் 16 பேரும் மரணித்துள்ளனர். அதில் 11 பேர் ஆண்களாவர்.

இதில், நாட்டில் மேலும் 538 பேருக்கு, நேற்று (11) தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 572,726 ஆக அதிகரித்துள்ளது.

## ஈஸ்டர் சந்தேகநபர்கள் மீது கைதிகள் தாக்குதல்

■ பாலித ஆரியவங்ச

பதுளை சிறைச்சாலையில் விசேட சிறைக்கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் நால்வர், ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேநகபர்கள் நால்வர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு சியோன் தேவால தாக்குதல் சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேநகபர்கள் நால்வர் மீதே, கைதிகள் நால்வரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதியன்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் பதுளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அன்றையதினம் இரவு உணவைப் பெற்றுக்கொள்வதற்காக, சந்தேநபகர்கள் நால்வரும் வரிசையில் நின்றுள்ளனர். அப்போது, கேரம் போர்டில் ஒரு பிரேமை உடைத்துக் கொண்டு வந்து, வரிசையில் நின்றுகொண்டிருந்த அந்த நால்வர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

விரைந்து செயற்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள், மோதலைத் தடுத்துள்ளனர். எனினும், தாக்குதல் நடத்திய கைதிகளில் இருவர் கூரையில் ஏறிக்கொண்டனர். மற்றுமொரு கைதி ஏறுவதற்கு முயன்ற போது கைது செய்யப்பட்டார். எனினும், கூரையிலிருந்த கைதிகள் இருவரும் பின்னர் இறக்கப்பட்டனர். எனினும், அதிலொருவர், பிளேட்டால் தன்னுடைய வயிற்றை வெட்டிக்கொண்டுள்ளார்.

அவர்கள் அனைவரும் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## துரைவி விருது-2022



2021 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு துரைவி விருது வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒன்றுக்கும் தலா 10000.00 ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும்.

**கட்டுரைத் தொகுப்பு**

கட்டுரைத் தொகுப்பு கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும்

**மொழிபெயர்ப்பு நூல்**

மொழிபெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்தாகவும் இருக்கலாம். மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும்.

**விதிகள்**

விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்று இருத்தல் வேண்டும். நூலாசிரியர்- மொழிபெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்

நூலாசிரியர்- மொழிபெயர்ப்பாளர் பற்றிய விபரக் கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

ஒவ்வொரு நூலின் மூன்று பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2022ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும்.

**முகவரி**

Duraivi, c/o Vijaya General Stores, 85, Wolfendhal Street, Colombo-13.

மேலதிகத் தொடர்புகளுக்கு- மேமன்கவி-0778681464, துரைவி அலுவலகம்- 011-2327011,

மின்னஞ்சல்- duraivi1931@gmail.com

## மடவளையில் நிறை குறைந்த பாண்

■ மொஹொமட் ஆஸிக்

மடவளைப் பிரதேசத்தில் விற்கப்படும் பாணின் நிறை குறைவாக இருப்பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக பாணின் நிறை 450 கிராமாக இருக்க வேண்டுமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைத் தெரிவித்த போதும், மடவளை நகரிலுள்ள சில கடைகளில் விற்கப்படும் பாண்களின் நிறை 270 கிராம் முதல் 290 கிராம் வரையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் அதிகாரிகள், இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லையென பொது மக்கள் தெரிவிக்கின்றனர்

நகைக்கடை கொள்ளை:

## 5 குழுக்கள் நியமனம்

பொரளை- மருதானை வீதியிலுள்ள தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகளுக்காக 05 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில், நேற்றுமுன்தினம் (11) வந்த இருவர் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தி நகைக்கடையில் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட 05 பெட்டிகளுடன் உடனடியாக அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை.

## புதிய பாதிப்பு ஏற்படாவிடின் பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்

புதிய கொரோனா வைரஸ் பிறழ்வால் பாதிப்பு ஏற்படாவிட்டால், அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் ஜனவரி மாதமளவில் அழைக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தற்போது 25 சதவீத மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## தமிழை உள்ளடக்குமாறு செந்தில் வலியுறுத்தல்



அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றப்படும் புதிய பெயர் பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவது கண்டிக்கதக்க விடயமென இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது:

சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றியமைக்கப்படும் புதிய பெயர் பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களம், தமிழ் மொழிகள் உள்ளன. சிங்களம் மற்றும் தமிழ்மொழிபேசும் மக்கள் பயன்படுத்தும் அங்காடியாக சதொச உள்ளது. ஆகவே, தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்ன என்றும் வினவியுள்ளார்.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதுடன், தேசிய மொழிகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளேன். உடனடியாக இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் வலிறுத்தியுள்ளேன் என்றார்.

விடுவிக்கப்பட்ட காணிகள்

# பகிர்ந்தளிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்





பல்லவராயன்கட்டுப் பகுதியில், வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் விடுவிக்கப்பட்ட காணிகளை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை, அவரது இணைப்பாளர் வைத்தியநாதன் தவநாதன், நேற்றைய தினம் (12) முன்னெடுத்தார்.

கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் பிடியில் இருக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்கள் பாவனைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, காணி அமைச்சரைப் பணித்திருந்தார்.

இதில், பூநகரி பிரதேச செயலக பிரிவுக்கு உடபட்ட பல்லவராயன்கட்டுப் பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் காணியை, அந்தப் பகுதியில் உள்ள தகுதிவாய்ந்த மக்களுக்கு பிரித்தளிப்பதற்கான பதிவுகள், நேற்றைய தினம் (12) மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பதிவுகளின் அடிப்படையில்,பொருத்தமான பயனாளிகள் உரிய முறையில் தெரிவுசெய்யப்பட்டு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் விரைவில் காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

மேலும், கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் உள்ள 300 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் அந்தப் பகுதியில் உள்ள காணிகளற்ற மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

நள்ளிரவில் திடீரென வைக்கப்பட்ட

# புத்தர் சிலை அகற்றப்பட்டது

## வீதியில் பொதுமக்கள் சத்தியாக்கிரகம்; பொலிஸார் குவிப்பு







■ வி.ரி.சகாதேவராஜா, பாறுக் ஷிஹான், நூருல் ஹூதா உமர், எஸ்.கார்த்திகேசு

பொத்துவில்-கல்முனை பிரதான வீதியில் தாண்டியடிக்கும் சங்கமங்கண்டிக்கும் இடையிலான பிரதேசத்திலுள்ள காட்டுப் பிரதேசத்தின் பிரதான வீதி அருகில் வெள்ளிக்கிழமை (10) நள்ளிரவு திடீரென வைக்கப்பட்ட புத்தர் சிலையால் அப்பிரதேசத்தில் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு புத்தர் சிலை வைக்கப்பட்ட செயற்பாட்டைக் கண்டித்து, பிரதேச மக்கள் வீதியில் அமர்ந்து நேற்று முன்தினம் (11) எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பொத்துவில் முஹூதுமஹாவிகாரை விகாராதிபதி வண. உடதம்பல ரத்னபிரிய தலைமையிலான 08 பிக்குமார் அங்கு சிலைக்கருகாமையில் நின்றிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுடன் பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் ஏ.றஹீம், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் ஜெயசிறில், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் கமலராஜன் ஆகியோரும் காணப்பட்டனர்.

சிலை அகற்றப்படும் வரை இங்கிருந்து நகரப்போவதில்லையென போராட்டத்தில் ஈடுபட்டோர் சூளுரைத்தனர்.இதனையடுத்து சம்பவ இடத்தில் பொத்துவில், திருக்கோவில் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கமைவாக, காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் பொலிஸாருடன் இணைந்து, பொத்துவில் முஹூதுமஹாவிகாரை விகாராதிபதியுடன் கலந்துரையாடினார்.

இதன்போது தவிசாளர் கூறுகையில்: “இது 100 சதவீதம் தமிழ்ப் பிரதேசம் ஆகும். இங்கு புத்தர்சிலை வைப்பதன் நோக்கம் என்ன? மதவெறி இந்தநாட்டை அழித்துவிடும். எனவே, எவ்வித அனுமதியுமில்லாமல் இரவோடிரவாக வைத்த சிலையை அகற்றுமாறு வேண்டுகிறோம்” என்றார்.

பதிலுக்கு வண.உடதம்பல ரத்னபிரிய கூறுகையில்: “இது பௌத்த நாடு. நாம் எங்கும் சிலை வைப்போம். இந்த இடத்தில் 2,500 ஆண்டுகளுக்கு முன்னும் சிங்கள பௌத்தர்கள் இருந்துள்ளனர். அருகில் தொல்பொருள்இடமுள்ளது. பௌத்தர்கள்தான் இவ்விடத்தின் பூர்வீகமக்கள். சிலையை அகற்றமுடியாது” என்றார்.

இந்நிலையில், அவ்விடத்தில் வைக்கப்பட்டு இருந்த புத்தர் சிலையானது, நேற்று (12) அகற்றப்பட்டது. எனினும், புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த கம்பியாலான பீடம், பௌத்த கொடிகள் அகற்றப்படாது உள்ளன.

# வரணியில் விபத்து; மூவர் படுகாயம்



■ எஸ். தில்லைநாதன், எஸ்.நிதர்ஷன்

தென்மராட்சி, வரணியில், நேற்று (12) மதியம், பயணிகள் சிற்றூர்தியும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில், 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள், வரணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிற்றூர்தியின் பின்பக்கமாக டிப்பர் வாகனம் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.





# சிலை திறப்பு

■ எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, குக் ரோட், முதலாம் ஒழுங்கையில் சுப்பிரமணிய பாரதியாரின் உருவச்சிலை திறந்து வைக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (11) முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது, மறவன்புலவு சச்சிதானந்தம் சம்பிரதாயபூர்வமாக சிலையை திரைநீக்கம் செய்து திறந்துவைத்தார்.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மறவன்புலவு சச்சிதானந்தம், பாலகுமார சர்மா குருக்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை, யாழ். நாக விஹாரையின் விகாரதிபதி வண. மீஹசந்துர விமலதேரர், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுமன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கசிப்புடன் ஒருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை பகுதியில், கசிப்புடன் ஒருவர், நேற்று (12) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் வீட்டில் இருந்து 1,500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெண் நித்திரை;

# தாலிக்கொடி வெட்டி கொள்ளை

■ கனகராசா சரவணன், வி.சுகிர்தகுமார்

அம்பாறை, கோளாவில் பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றில் நித்திரையில் இருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான 10 பவுண் நிறை கொண்ட தாலிக் கொடியை வெட்டி எடுத்துச் சென்றுள்ள சம்பவம், நேற்று முன்தினம் (11) இடம்பெற்றுள்ளது.

அதிகாலை 2.30 மணியளவில் வீட்டில் அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது, ஜன்னல் கம்பியை கழற்றி, வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர், இவ்வாறு தாலிக்கொடியை வெட்டி எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

தாலி தன்கழுத்தில் இருந்து கழன்று செல்வதை உணர்ந்த அப்பெண், சத்தமிட்டு கணவரை எழுப்பிய போதும், ஏற்கெனவே திறந்து வைத்திருந்த முன் கதவின் வழியாக, கொள்ளையர் ஓடிச் சென்றதாக குடும்பத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பெண்ணின் கணவரின் மணிப்பேர்ஸ்சையும் எடுத்துச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோளாவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆலையடிவேம்பில் உள்ள வீடொன்றிலும் இதே பாணியில் பெண்ணொருவரின் தாலிக் கொடி அபகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட

# பதில் அரசாங்க அதிபராக ஜெகதீசன் நியமனம்

■ வி.ரி.சகாதேவராஜா



அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபராக, இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய டி.எம்.எல்.பண்டாரநாயக்க, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

அவரது வெற்றிடத்துக்கு பொது நிர்வாக அமைச்சு இப்பதில் நியமனத்தை வழங்கியுள்ளது.

பாண்டிருப்பைச் சேர்ந்த வே.ஜெகதீசன், முன்னதாக ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராக பணியாற்றி, இறுதியாக 2019இல் பதவியுர்வு பெற்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றி வந்திருந்தார்.

# வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

■ எஸ். தில்லைநாதன்



வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில், கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில், நாளை (14) நடைபெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் காலதாமதம் அடையும் நிலைமையில், இந்த ஏற்பாட்டை ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

300 கிலோ கிராம் நிறையுடைய

# கடல் ஆமையுடன் ஒருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன், எஸ்.நிதர்ஷன்



யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில், 300 கிலோ கிராம் நிறையுடைய கடல் ஆமையுடன், நேற்று (12), ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடல் ஆமையை ஆழ்கடலில் கொண்டு சென்று விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள்களில்

# நான்கு கேஸ் அடுப்புகள் வெடிப்பு

■ எம்.எம்.அஹமட் அனாம்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், இரண்டு நாள்களில் நான்கு கேஸ் அடுப்புகள் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

அந்தவகையில், பிறைந்துறைச்சேனை பகுதியில் இரண்டு கேஸ் அடுப்புகள், ஓட்டமாவடி, வாழைச்சேனை பகுதியில் தலா ஒரு கேஸ் அடுப்புகள் என நான்கு கேஸ் அடுப்புகள், வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் வெடித்துச் சேதமாகியுள்ளன.

இந்நிலையில், வீடுகளில் இருந்தவர்கள் எவருக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், கேஸ் அடுப்புகள் மாத்திரமே வெடித்துள்ளதாவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பேசாலையில்

# டெங்கொழிப்பு சிரமதானம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்





மன்னார் மாவட்டத்தில், அண்மைக்காலமாக பெய்து வந்த கடும் மழை வெள்ளம் காரணமாக, மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் டெங்கு நோய் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில், நேற்றைய தினம் (12) காலை, பேசாலை பகுதியில், சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. பேசாலை பகுதியில், நேற்று முன்தினம் (11) வரை 90க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு, மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக தெரியவருகின்றது.

விகாராதிபதியை இடமாற்றக் கோரி

# புன்னக்குடா மக்கள் ஆர்ப்பாட்டம்

■ வா.கிருஸ்ணா





மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா பகுதியில் வசிக்கும் மக்கள், நேற்று (12) ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

புன்னக்குடா பகுதியிலுள்ள புன்னியாராஜ விகாரையின் விகாராதிபதி தம்பக்கல வனரத்ன தேரரை, அவ்விகாரையில் இருந்து இடமாற்றும் படியே குறித்த பகுதியில் வாழும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், குறித்த விகாரையில் சிறுவன் ஒருவரை, துஷ்பிரயோகப்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேரர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனவே, தமக்கு தேரர் தேவை இல்லை எனவும் வழிபாட்டுக்கு விகாரைக்கு செல்ல பிள்ளைகள் அச்சப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

பட்ஜெட் வாக்கெடுப்பில்

# பலத்தை நிரூபித்தேன்

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

பெருந்தோட்ட மலையக மக்களுக்கு சாதகமற்ற 2022 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டுக்கு எதிராக என்னுடைய வாக்குப் பலத்தைப் பிரயோகித்துள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

2022 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில், விமான வேகத்தில் அதிகரித்து செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதற்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலோ பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை வேதனம் தொடர்பிலோ அவர்களுடைய உட்கட்டமைப்பு



வசதி, தொழில் பிணக்குகள், கல்வி அபிவிருத்தி, சுகாதாரம் இவை தொடர்பிலோ எதுவித சரத்துகளும் உள்வாங்கப்படவில்லை.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், கடந்த ஒரு மாத காலமாக இந்தப் பட்ஜெட் தொடர்பான வாத விவாதங்கள், பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து, மலையக மக்கள் தொடர்பாக அவர்களுடைய சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி தொடர்பாகப் பல கருத்துகள் என்னால் எடுத்துரைக்கப்பட்டன.

எனினும், முறையான ஒரு தீர்வு, இந்தப் பட்ஜெட்டில் உள்வாங்கப்படவில்லை என்பது பாரியதொரு வேதனைக்குரிய விடயமாகும். ஆகவே, இதற்கு எதிராக மலையக மக்கள் சார்பாக, னன்னுடைய வாக்குப் பலத்தை பிரயோகித்தேன் எனத் தெரிவித்தார்

பசறையில்

## புதிய பாலம் தாழிறங்கியுள்ளது

ராமு தனராஜா



பதுளை- பசறை பிரதான வீதியில் 2 கட்டையில் இருந்து தெளிபெத்தை, கெந்தகொல்ல ஆகிய பல பிரதேசங்களுக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டு இருந்த புதிய பாலம் தற்போது தாழிறங்கி உள்ளது.

இப்பாலம் அமைக்கப்பட்டு ஒரு வருடம் கூடப் பூர்த்தியாகாத நிலையில், இப்பாலம் தாழிறங்கி உள்ளமை தொடர்பில் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இதன் காரணமாக, போக்குவரத்ததுக்காக பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட பழைய பாலத்திலேயே வாகனங்கள் செல்கின்றன. இருப்பினும் பழைய பாலம் பாதுகாப்பற்ற நிலையில் மிகவும் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி, பாதுகாப்பான பாலமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

விறகுக்குச் சென்ற டிங்கிரி மெனிக்கே

## ஐந்து நாள்களாகியும் வீடு திரும்பவில்லை

எஸ்.கணேசன்



வலப்பனை, கும்புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கும்புக்வெல, மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி மெனிக்கே என்ற மூதாட்டியே காணாமல் போயுள்ளார்.

அவர் இந்த மாதம் 6ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றுள்ளார்.

அவர் இதுவரை வீடு திரும்பாத நிலையில், அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில், தெரிபே பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்த போதிலும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.


எனினும், கடந்த 8ஆம் திகதி முன்னெடுத்த தேடுதலில், குறித்த பெண் விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியைக் கண்டுபிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து, அருகில் உள்ள காட்டில் தேடிய போது, உடைந்த மரக் குற்றியில் குறித்த மூதாட்டி அணிந்திருந்த உடையும், விறகு தூக்கும் போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெக்கப்பட்டுள்ளது. எனினும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களை பயன்படுத்தி மூதாட்டியை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், காணாமல் போன டிங்கிரி மெனிக்கே தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## காசல்ரீ நீர்த்தேக்கம் சுத்தம் செய்யப்பட்டது




எஸ்.சதீஸ்

பொலிஸாரும் சூழல்பாதுகாப்பு அதிகாரிகளும் இணைந்து காசல்ரீ நீர்த்தேக்கத்தை சுத்தம் செய்யும் பணிகள் நேற்று (12) இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

காசல்ரீ நீர்தேக்கத்தில் காணப்படுகின்ற, குப்பைகளை அகற்றும் நடவடிக்கை, இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன், பொகவந்தலாவை. கினிகத்தேனை, மஸ்கெலியா, வட்டவளை, நோர்வூட் நல்லதண்ணி, நோர்டன்பிரீஜ், ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தப் பணிகளை முன்னெடுத்தனர்.





## இரத்த தானம்



சிங்கர் நிறுவனத்தின் பசறை கிளையின் ஏற்பாட்டில், நேற்று (12) இரத்ததான நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான குருதி கொடையாளர்கள் கலந்துகொண்டனர். இதேவேளை, 'இரத்த தானம் செய்வோம்; உயிரைக் காப்பாற்றுவோம்' எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம், நுவரெலியா YMMA சங்கதால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (நடராஜா மலர்வேந்தன், டி சந்ரு)



பிளக்வூல் பகுதியிலுள்ள வீடொன்றில் தீபரவல்

## அயலவர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது

ஆ.ரமேஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிளக்வூல் பகுதியிலுள்ள வீடொன்று நேற்று (12) காலை தீபரவலுக்கு உள்ளானது.

நுவரெலியா மாநகர சபை தீ அணைக்கும் பிரிவினர், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு, சம்பவ இடத்துக்குச் செல்லும் முன்னர், அயலவர்களால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இத் தீவிபத்தால் உயிர் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள நுவரெலியா பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர்.

மின்சார ஒழுக்கு காரணமாகவே தீ விபத்து சம்பவித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதென தெரிவித்த பொலிஸார், வீட்டிலிருந்த உடமைகள் சில எரிந்துள்ளதாக தெரிவித்தனர்.

இரத்தினக்கல் வியாபாரியாக மாறிய

## தேங்காய் வியாபாரி சிக்கினார்

மஹேஸ் கீர்த்திரத்ன



பல வருடங்களாக இரத்தினக்கல் வர்த்தகர் என இனம் காட்டிக்கொண்டு, பல பிரதேசங்களுக்குச் சென்று, போலி இரத்தினக்கற்களை காண்பித்து, பெண்களை ஏமாற்றி பல கோடி ரூபாய்களை மோசடி செய்த நபர் ஒருவர், மட்டக்குளிய பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர், யக்கல- மொரேதென்ன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர், கொழும்பில் தேங்காய் விற்பவர் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக மாத்தளை பொலிஸ் நிலையத்தில் 6 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய, முன்னெடுத்த விசாரணைகளுக்கமையவே கொழும்பு- மட்டக்குளி பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் தங்க நகைகளை அணிந்திருக்கும் பெண்களை நெருங்கி, முதலில் கதைத்து நண்பராகி பின்னர் தனது மோசடியை அரங்கேற்றுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, சந்தேகநபர் இவ்வாறு பெண்களை ஏமாற்றி 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துள்ளதாகவும் இவ்வாறு அபகரிக்கும் நகைகளை கிரிபத்கொட, நிட்டம்புவ பகுதிகளிலுள்ள நகைக் கடைகளில் விற்று பணம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வீட்டுப் பணிப்பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் தான்

## ஒருமித்த குரலாக ஒலிக்க முடியும்

### புரடெக் அமைப்பு தெரிவிப்பு

இரா.யோகேசன்



வீட்டுப் பணிப்பெண்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும்; அப்போதுதான் ஒருமித்த குரலாக எங்களால் முன்னோக்கிச் செல்ல முடியும் என புரடெக் அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் கருப்பையா மைதிலி தெரிவித்தார்.

ஹட்டன் லா எடம்ஸ் விருந்தகத்தில், ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது: வீட்டுப் பணிப்பெண்களின் கோரிக்கை, பிரச்சினை என்பது சுமார் 200 வருட பழைமை வாய்ந்தது. வீட்டுப் பணிப்பெண்களின் உரிமைகள் என்பது, தீர்க்கப்படாத ஒன்றாகக் காணப்படுகின்றன.

எனவே, வீட்டுப் பணிப்பெண்களின் உரிமைகள் என்ன? இவர்களுக்கு கிடைக்கும் குறைந்த பட்ச வருமானம் என்ன என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளை எடுத்து செல்லும் நோக்கிலேயே புரடெக் தொழிற்சங்கம் செயற்படுகின்றது.

வீட்டுப் பணிப்பெண்கள் தங்களுக்கான சம்பளத்தை ஒரு கோரிக்கையாக வைக்க வேண்டும். அத்துடன், எட்டு மணித்தியாலத்துக்கு மேல் வேலை செய்கின்றோம் என்பதையும் உணர வேண்டும்.

இப்படியான சூழ்நிலையில்தான் இந்த புரடெக் தொழிற் சங்கத்தில் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களின் பிரச்சினைகளை வெளிகொணர முயற்சிக்கின்றோம். அதற்கு வீட்டுப் பணிப்பெண்கள் அவர்களின் பிரச்சினைகளை கூறுவதற்கு முன் வர வேண்டும். இவர்கள் சட்டபூர்வமாக பாதுகாக்கப்பட்டால் மாத்திரமே அவர்களுக்கான உரிமைகள், சுதந்திரம் கிடைக்கும் என்றார்.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பால்

## சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்களுக்கு சிக்கல்

ரஞ்சித் ராஜபக்ஸ



சுற்றுலா ஹோட்டல்களுக்கு வருகைத் தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்படும் காலிபிளவர், பிரக்கோழி, சலாது போன்றவற்றின் விலைகள், பாரியளவில் அதிகரித்துள்ளதாக சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலிபிளவர் ஒரு கிலோ கிராம் 1500- 2,000 ரூபாய் வரையும் பிரக்கோழி 2,500- 3,000 ரூபாய் வரையும் சலாது 800 ரூபாய்க்கும் விற்கப்படுவதாக சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொட்டகலையில்

## மற்றுமோர் அடுப்பு வெடித்துச் சிதறியது


கே.சுந்தரலிங்கம்

கொட்டகலை பகுதியில் மற்றுமோர் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளதாக, திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம், கொட்டகலை டிரேட்டன் கே.ஓ பிரிவில் பழைய வீடமைப்புத் திட்டத்தில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீடொன்றில் நேற்று (12) அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தண்ணீர் சுட வைப்பதற்காக, ஆசிரியை எரிவாயு அடுப்பை மூட்டிய போதே, இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த எரிவாயு சிலிண்டர், கொட்டகலை பகுதியில் உள்ள எரிவாயு விற்பனை நிலையம் ஒன்றில் 15 நாள்களுக்கு முன்னர், கொள்வனவு செய்துள்ள நிலையில், கடந்த வாரமும் கொட்டகலை பகுதியில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சீண்டிப் பார்த்தல் நல்லிணக்கத்தில் விரிசல்களையே ஏற்படுத்தும்

அடிபட்டுவிட்டு, அமைதியடைந்துவிட்டால், அவ்வாறானவர்கள் திருப்பியடிக்கமாட்டார்கள் என நினைத்துகொண்டு, அவ்வப்போது அவர்களைச் சீண்டிப் பார்ப்பது, அவ்வளவுக்கு நல்லதல்ல. என்றோர் ஒருநாள், திருப்பியடித்துவிட்டால் நிலைமை சிக்கலாகிவிடுமென்பதை மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம்.

பல்லினங்கள் வாழும் நாட்டில், எடுக்கப்படும் தீர்மானங்கள் ஒன்றுக்கு இரண்டொரு தடவைகள் சிந்தித்துப் பார்த்து எடுப்பதே, எந்த மட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன, அவ்வனைவருக்கும் பொருத்தமானதாக அமையும். அதனை இனியாவது கடைப்பிடிக்கவேண்டும். இல்லையேல் கசப்புணர்வுகள் விரிசலை ஏற்படுத்திவிடும்.

தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் எத்தனையோ இருக்கின்றன. காஸ் சிலிண்டரில் குமிழ்கள், காஸ் அடுப்புகள் வெடித்தல், பயிர்நிலங்களுக்குத் தேவையான பசளைகள், திரவ பசளை கேன்கள் வெடித்தல், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம். இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம்.

நாளொன்றுக்கு மூவேளையும் திருப்தியாக உண்ணமுடியாத அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்துக்குள் விழுந்துகொண்டிருக்கின்றது. பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான், சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்குள் அத்துமீறி நுழைந்து, புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன. நல்லபல போதனைகளைக் கூறியிருக்கும் புத்த பிரானை, ஆயுதமாக எடுத்துக்கொண்டு, சிறுபான்மையினரை சீண்டிப்பார்க்கும் கைங்காரியத்தை இனியாவது கைவிடவேண்டும்.

தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வைக்குள் நின்றுகொண்டு, புத்தர் சிலையை பலவந்தமாக வைத்து, அவ்விடங்களில் ஆராய்ச்சிகளை செய்வது, உலகளாவிய ரீதியில் எங்குமே முன்னெடுக்கப்படாத புதுமையான அகழ்வாராய்ச்சியாகும்.

சிறுபான்மையினர் தங்களுடைய இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, சதாகாலமும் போராட வேண்டியிருக்கின்றது. ஜனநாயகத்துக்கான போராட்டம் ஜனநாயகத்தின் எல்லைவரை மட்டுமே செல்லும். ஆதலால், பிரச்சினைகளைத் திசைதிருப்பவோ அல்லது இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலோ, சீண்டிப் பார்த்தலை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

புத்தர் சிலைகளை வைத்து, தமிழர்களின் பிரதேசங்களை அதட்டாக கைப்பற்றுவது ஒன்றும் புதுமையான விடயமல்ல. அதன், மிக அண்மித்த சம்பவமாகவே, அம்பாறை சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்தில், நேற்றுமுன்தினம் (11) புத்தர் சிலை வைக்கப்பட்டமையை குறிப்பிடலாம்.

இரவோடு இரவாக வைக்கப்பட்ட அச்சிலை, பொதுமக்கள், அரசியல்வாதிகள் ஆகியோரின் சாத்வீகப் போராட்டத்துக்குப் பின்னர் அகற்றப்பட்டுள்ளது. அது ஒருபுறமிருக்க, வவுனியா, செட்டிகுளம் மெனிக்பாம் கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்காக பயிரிடப்பட்ட உளுந்து பயிர்ச்செய்கையை சேதப்படுத்திய வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கற்களை நாட்டி, காணிகளை கையகப்படுத்தியுள்ளனர்.

சிறுபான்மையின மக்களை இவ்வாறு நாலாபுறங்களிலும் வேண்டுமென்றே சீண்டிப்பார்க்கும் அற்பத்தனமான செயல்களைக் கைவிடவேண்டும். அவற்றின் ஊடாகவே நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை மீண்டும், மீண்டும் ஞாபகப்படுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# ‘அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்’




என்.கே. அஷோக்பரன்
twitter: @nkashokbharan


‘மாவீரன் கர்ணன்’ என்ற வாசகத்தைத் தனது ஓட்டோவின் பின்புறத்தில் ஒட்டிய முல்லைத்தீவை சேர்ந்த இளைஞர்கள் இரண்டுபேர், முல்லைத்தீவு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

‘மாவீரன்’ என்ற சொல்லை, ஓட்டோவில் பதிந்திருந்தமை தொடர்பில், வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு ஓட்டோவுடன் வருகைதருமாறு சகோதரர்களான 21, 19 வயதுடைய இளைஞர்களை, முல்லைத்தீவு பொலிஸார் அறிவுறுத்தி இருந்தனர்.

அவர்களை அழைத்து, வாக்குமூலம் பெற்றுக்கொண்டிருந்தவேளை, ஊடகங்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கும் பாதிக்கப்பட்டவர்களால், தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்யப்பட்டு இருந்தமையால், உடனடியாகக் குறித்த காரணத்தைக் காட்டி, கைது நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிய பொலிஸார், போக்குவரத்துப் பொலிஸாரின் கடமைக்கு ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில், ஓட்டோவை ஓட்டிய 19 வயதான இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பாடசாலை மாணவனை **09.12.2021** அன்று கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து, மறுநாள் **10.12.2021** மதியம் பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளதாக, பாதிக்கப்பட்ட அந்த இளைஞர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் விளைவித்துள்ள, சட்டவிரோதமான கைது, சட்டத்துக்கு முன் சமனாக நடத்தப்படுதல் ஆகிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில், குறித்த இளைஞர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினூடாக மட்டுமல்லாமல், உயர்நீதிமன்றத்தையும் நாடுதல் பொருத்தமானதாகும். அது ஒருபுறமிருக்க, இந்தச் சம்பவம், ‘அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்’ என்ற பழமொழிக்கான நிஜ உதாரணமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல.

‘மாவீரன்’ என்ற ஒரு தமிழ்ச் சொல்; அதன் சூழமைவு பற்றி எந்த அக்கறையுமின்றி, இலங்கை அரச இயந்திரத்தை அச்சம் கொள்ளச் செய்கிறது என்றால், எப்பேற்பட்ட அச்சத்தில் அரண்டும், மிரண்டும் போயுள்ளதொரு கோழை அரச இயந்திரமாக அது இருக்க வேண்டும்?

தமிழ் என்றால் பயம், தமிழனென்றால் பயம் என்ற மனநிலையில், எப்படி ஓர் அரச இயந்திரம் இயங்க முடியும்? அதுவும், சிங்களவர்களுக்கு அடுத்த பெரும்பான்மை இனமான தமிழர்களைக் கொண்ட நாட்டில், அந்தக் குடிகளை அச்சத்துடனும் சந்தேகத்துடனும் அரச இயந்திரம் அணுகினால், அந்த நாடு எப்பிடி அனைவருக்குமான நாடாக முடியும்?

‘ஒரு நாடு, ஒரு தேசம், ஒரு சட்டம்’ என எல்லாவற்றிலும் ‘ஒற்றுமை’யை உருவாக்க விளைகிறவர்கள், நாட்டின் பிரதான மக்கள் கூட்டத்தை, அச்சத்துடனும் சந்தேகத்துடனும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் அணுகிக்கொண்டு, தாம் விரும்பும் அந்த ‘ஒற்றுமை’யை ஒருபோதும் ஸ்தாபிக்க முடியாது.

ஒரு சிங்கள இளைஞன், தன்னுடைய ஓட்டோவில் ‘மாவீரன் துட்டகைமுனு’ என்று, தான் விரும்பும் மகாவம்சக் கதாப்பாத்திரத்தின் பெயரை எழுதிக்கொண்டால், அவனை பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்களா? அப்படியானால், ஒரு தமிழ் இளைஞன் தன்னுடைய ஓட்டோவில், ‘மாவீரன் கர்ணன்’ என்று, தான் விரும்பும் மகாபாரதக் கதாபாத்திரத்தின் பெயரை எழுதிக்கொண்டால், அந்த இளைஞனை விசாரணைக்கு அழைப்பது ஏன்?

ஊடகங்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தலையிட்டதும், உடனே அந்த நபரைப் போக்குவரத்துக் குற்றச்சாட்டுக்காகக் கைது செய்வது ஏன்? அவர் மீது சாட்டப்பட்ட போக்குவரத்துக் குற்றச்சாட்டுக்காக, அந்நபரை இரவு முழுவதும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தது ஏன்? போக்குவரத்து பொலிஸாரின் கடமைக்கு ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுகிற அனைவரும், இரவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படுகிறார்களா என்ன? ஏன், இந்தப் பாரபட்சம்? இதுதான் ‘ஒரு நாடு, ஒரு சட்டம்’ என்பதைக் கட்டியெழுப்பும் முறையா?

தமிழ் மக்களை, அவர்கள் தமிழர்கள் என்பதற்காக எல்லா வகையிலும் அலட்சியம் செய்யும் ஓர் அரச இயந்திரத்தால் ஒருநாளும் இந்நாட்டில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியாது என்பதை இத்தனை தசாப்த இனமுரண்பாடுகளைக் கடந்தும், ஓர் அரசாங்கம் புரிந்துகொள்ளவில்லையென்றால், இது புரிதல் பற்றிய பிரச்சினையல்ல; இது மனப்பான்மை பற்றி பிரச்சினை.

தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தும் போக்கை, இன்னும் சில சம்பவங்கள் மேலும் ஒப்புவிப்பதாகவே அமைகின்றன. ‘ஒரு நாடு, ஒரு சட்டம்’ அமைக்க ஜனாதிபதி ஒரு செயலணியை அமைத்திருந்தார். அந்தச் செயலணி அறிவிக்கப்பட்டபோது, அதில் ஒரு தமிழர் கூட நியமிக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்தபோது, அதைப்பற்றி அக்கறை கொள்ளாது, இரண்டு தமிழர்களை அந்தச் செயலணிக்கு நியமித்தார் ஜனாதிபதி.

தற்போது கூட, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி ஆணையாளர்களை நியமித்துள்ளார். அதில் ஒரு தமிழரோ, ஏன் முஸ்லிமோ கூட இல்லை. இலங்கை ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் பல இனத்துவேச, இனவாத நடவடிக்கைகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தம்மை நேரடியாக இனவாதிகளாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, அவர்கள் சில பெயரளவு நடவடிக்கைகளிலேனும் (tokenism) ஈடுபட்டார்கள். அதன் பலனாக, எல்லாக் குழுக்களிலும் சிறுபான்மையின பிரதிநிதி ஒருவரையேனும் நியமித்தல், சில முக்கிய அரச பதவிகளுக்கு, தமக்கு விசுவாசமான தமிழர்களை நியமித்தல் என, இந்தப் பெயரளவு நடவடிக்கைகள் அமைந்தன.

இத்தகைய பெயரளவு நடவடிக்கைகளை முன்னெடுத்த கட்சியினர், அரசியலுக்காக இனவாதத்தைப் பயன்படுத்தியவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு தமிழர்கள் மீதான தனிப்பட்ட காழ்ப்புணர்வு, அச்சம் என்பதைவிட, தமது அரசியல் பிழைப்புக்காக, தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை முன்னெடுத்தல் என்பதே அரசியலாக இருந்தது.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்களின் நிலை அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள், முஸ்லிம்கள் மீதான அச்சம் மட்டுமல்ல, கடும் துவேசமும் மிக்க ஆட்சியாளர்களாக இவர்கள் இருக்கிறார்களோ என்ற எண்ணத்தைத்தான் நடவடிக்கைகள் பறைசாற்றி நிற்கின்றன.

இன்று, இன சௌஜன்யத்துக்கான பெயரளவு நடவடிக்கைகள் கூடக் கைவிடப்பட்டு, பட்டவர்த்தனமான இனவாத முகத்தை ஆட்சியாளர்கள் வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று யோசித்தால், இரண்டு எண்ணங்கள் தோன்றுகின்றன.

ஒன்று, இவர்கள் சிறுபான்மையினரை உண்மையாக வெறுப்பவர்களாக இருக்க வேண்டும். அதாவது, அவர்களுக்கு முன்னையோர் அரசியலுக்காக கட்டிய இனவாதக் கதைகளை முழுமையாக நம்பி, சிறுபான்மையினர் மீது கடும் வெறுப்பைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இரண்டு, இவர்கள் சிறுபான்மையினர் மீது அச்சமும் சந்தேகமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தமது பாதுகாப்பின்மை உணர்வைப் பிரதியீடு செய்ய, சிறுபான்மையினரை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

உண்மையில், சிறுபான்மையினர் மீது அச்சமும் சந்தேகமும் கொண்டவர்களாக இவர்கள் இருப்பார்களேயானால், அது ஒரு மிகப்பெரிய மனநோய். இந்த நாட்டின் குடிமக்களில் ஒரு சாராரை வெறுத்துக்கொண்டு, நாட்டை ஆளுவதும் அந்த மனநிலையை நாட்டு மக்களிடையே விதைப்பதும் இந்த நாட்டின் ஜனநாயகத்துக்கு விஷமூட்டுவதைப் போன்ற செயல்தான். அது இந்த நாட்டின் ஜனநாயகத்தையும் இனசௌஜன்யத்தையும் ஒற்றுமையையும் கொன்றொழித்துவிடும்.

புத்தர் சொன்ன உபதேசங்கள், இங்கு முக்கியமானவையாகும். “வெறுப்பை வெறுப்பால் வெல்ல முடியாது; வெறுப்பை அன்பினால்தான் வெல்ல முடியும்; இது அழியாத உண்மை” என்று சொன்ன புத்தர், “மற்றவர்களுடைய குறைகளை எண்ணிப் பார்க்காதே; உன்னுடைய பாவச் செயல்களை எண்ணிப் பார். நீ என்ன செய்தாய், என்ன செய்யவில்லை என்பதை சிந்தித்துப்பார்” என்று உரைத்தார்.

மேலும் புத்தர், ‘உண்மையற்ற பொருளை இருக்கிறது என்று எண்ணுவோனும், உண்மையான பொருளை இல்லை என்பானும் என்றும் சத்தியத்தைக் காணவே மாட்டார்கள்” என்றும் கூறுகிறார்.

மூலைக்கு மூலை புத்தர் சிலைகளை வைப்பதில் காட்டும் அக்கறையை, ஆட்சியாளர்கள் புத்தரின் போதனைகளைக் கேட்பதிலும் பின்பற்றுவதிலும் காட்டினால் இலங்கை உண்மையில் புண்ணிய பூமியாவதற்கான வாய்ப்பு இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

செய்த தவறுகளை ஒத்துக்கொண்டு கவலைப்படுபவர், உண்மைக்கு உகந்தவர் ஆகின்றார்.

தெரிந்து தவறுசெய்பவர்கள், அதனைப் பூசி மெழுகி, தாங்கள் செய்ததே சரி என நிரூபிக்க முயல்வார்கள். உண்மை ஒன்றேதான்; அதற்குப் பல வடிவங்கள் கிடையாது. உண்மைக்கு முரணானவர்கள், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றார்கள். இதனால் எந்தவோர் அனுகூலத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது.

பிரச்சினைகள் ஒரு மனிதனைச் சுற்றி வளைத்திருக்கும்போது, அவர் தனது நடத்தைகளில் மாற்றங்களை உருவாக்கிவிடுகின்றார். அவர் சந்திக்கும் பிரச்சினை சூழ்நிலைகள், அவரை அவ்வாறு உண்மைக்குப் புறம்பாக நடக்கத் தூண்டக்கூடியவை.

வசதியற்றவர், தான் எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கு எதிர்நீச்சல் போடமுடியாது விட்டால், மாற்று வழி எதுவெனப் புரியாமலும், தெளிவு இன்றியும் கண்டபடி முடிவுகளை எடுக்கின்றார். துஷ்டத்தனமான செயல்களைச் செய்வதற்குத் தூண்டப்படுகின்றார்.

சோதனைகளில் வெற்றி பெற்றவர், துன்பங்களை ஏற்று அதை உடைக்கும் வழிமுறைகளைத் தனது நற்புத்தி மூலம், பெறுகின்றான்.

இந்தத் தெளிவு அவரை உயர்நிலையில் நிறுத்தி விடுகின்றது. சாக்குப் போக்குச் சொல்பவர்கள், நல்ல விடயங்களைச் கண்டுகொள்வதில்லை. நிதானம், நேர்மை நழுவலாகாது.

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியின் இரண்டு புறங்களிலும் உள்ள பற்றைகளை அகற்றுங்கள்

கிளிநொச்சி, பூநகரி 10ஆம் கட்டையில் இருந்து முக்கொம்பன் கிராமத்துக்குச் செல்லும் வீதியின் இரு புறங்களிலும் காணப்படும் பற்றைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி, முக்கொம்பன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

குறித்த வீதியில் பயணிப்பவர்கள், விலங்குகளுடன் மோதுண்டு விபத்துகளை எதிர்கொள்வதாகவும் பயிர்ச் செய்கைக் காலங்களில், காடுகளில் இருந்து யானைகள் குறித்த வீதியில், மாலை நான்கு மணிக்குப் பின்னர் நடமாடி, வீதியில் பயணிப்பவர்களைத் தாக்க முற்படுவதாகவும் அத்துடன் குடமுருட்டிக் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கொம்பனில் இருந்து 10ஆம் கட்டை சந்தி வரையான எட்டு கிலோ மீற்றர் தூர வீதியின் இரு புறங்களிலும் காணப்படும் பற்றைகளைத் துப்புரவு செய்வதன் மூலம், இரவு வேளைகளில் பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கும் முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு போன்ற கிராமங்களுக்கும் மக்கள் பாதுகாப்பாகச் செல்ல முடியும் என தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த வீதியின் இருபுறங்களிலும் காணப்படும் பற்றைகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மேற்கண்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை:

திமுக செல்வாக்கு அதிகரிக்கிறது

# ஸ்டாலினை புகழ்ந்தார் மோடி

பிரதமர் மோடியின் மனதில் ஸ்டாலின் இடம் பிடித்துவிட்டதாக புதுடெல்லியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திராவிட முன்னேற்ற கழகமும் (தி.மு.க) பாரதிய ஜனதா கட்சியும் (பா.ஜ.க) எதிரெதிர் துருவங்களில் தற்போது இருந்தாலும் முதலமைச்சர் ஸ்டாலினின் நடவடிக்கையைப் பார்த்து, பிரதமர் மோடி வியந்து பாராட்டியுள்ளார்.

முதலமைச்சராகப் பதவியேற்றதில் இருந்தே அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற



வேண்டுமென்ற நோக்கில் செயற்பட்டு வருகிறார் ஸ்டாலின். தேர்தல் முடிவுகள் வெளியானவுடனே அவர் சொன்னது, “தி.மு.கவுக்கு வாக்களித்தவர்கள் பெருமைப்படும் விதமாகவும், வாக்களிக்காதவர்கள் ஐயோ இவருக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என வருத்தப்படும் அளவுக்கு செயல்படுவேன்” எனக் கூறியிருந்தார். கடந்த ஆறு மாதங்களில் அவரது செயற்பாடுகள் அதற்கு வலுச் சேர்க்கும் விதமாகவே அமைந்துள்ளன.

முதல் இரண்டு மாதங்களில் அ.தி.மு.கவினர் தி.மு.க அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் புகழ்ந்து பேசினர். தற்போது பிரதமர் மோடியேஸ்டாலினை புகழ்ந்து பேசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுடெல்லி:

## சலுகைகள் வழங்குவதில் போட்டாபோட்டி

பெண்களுக்கு சலுகைகள் வழங்குவதில் அரசியல் கட்சிகள் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு வாக்குறுதிகளை அள்ளி வீசிவருகின்றனர்.

காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி என்பன வாக்குறுதிகள் வழங்குவதில் முன்னிற்கின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.5,000 வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவா மாநிலத்தில் வரும் 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது ஆளுங்கட்சியாக இருக்கும் (பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) உடன் காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி என பலமுனைப் போட்டி நிலவும் சூழல் ஏற்பட்டுள்ளது.

புதுடெல்லி:

## ஜெயலலிதாவின் கார் காட்சிப்பொருளாகிறது



தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, ராஜ்யசபா உறுப்பினராக இருந்தபோது புதுடெல்லியில் மாருதி 800 காரை வாங்கி பயன்படுத்தினார். பாராளுமன்றத்துக்கு இந்தக் காரில் தான் அவர் செல்வார்.

இப்போது அந்தக் கார், அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் (அ.தி.மு.க) சேர்ந்த தம்பிதுரையின் புதுடெல்லியிலுள்ள பங்களாவில் உள்ளது. இந்தக் காரில் இப்போது ‘ஸ்டியரிங்’ கிடையாது. இருக்கைகளும் படு மோசமாக உள்ளன. மின்கலமும் இல்லை.

புதுடில்லியில் தேசிய கட்சிகளுக்கு அலுவலகம் கட்டப்பட உள்ளது. அ.தி.மு.கவுக்கு அலுவலகம் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இந்த அலுவலகத்தில் ஜெயலலிதா உபயோகித்த பொருட்களை வைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

போக்ரான்:

## ஏவுகணை சோதனை வெற்றி



ராஜஸ்தான், போக்ரானில் வெவ்வேறு தூர இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் பினாகா ஏவுகணை சோதனை தொடர்பான மற்ற சோதனைகளும் வெற்றிகரமாக முடிந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ரக ஏவுகணைகள் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன தொழில்நுட்ப உதவியுடன், தனியார் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவை, 40 கிலோ மீற்றர் தூரம் முதல் வெவ்வேறு தூரங்களில் உள்ள இலக்குகளை தாக்கும் சக்தி கொண்டவை.

சென்னை:

## தேசியவாதிகளை கைதுசெய்வது ஏன்?

### ஸ்டாலினிடம் பா.ஜ.க அதிரடி கேள்வி

அதிகாரத்தை நோக்கி கேள்வியெழுப்பும் தேசியவாதிகளைக் கைது செய்வதன் காரணம் என்னவென, ஸ்டாலினிடம் பாரதிய ஜனதா கட்சி ( பா.ஜ.க) அதிரடி கேள்வி எழுப்பியுள்ளது.

மு.க. ஸ்டாலினிடம் கேள்வி எழுப்பும் வகையில், பா.ஜ.கவின் சிடி ரவி டுவிட்டரில் பதிவிட்டிருப்பது பேசுபொருளாக மாறியுள்ளது.

மதுரையைச் சேர்ந்த மாரிதாஸ், திராவிட அரசியலை, திராவிட கட்சிகளைக் கடுமையாக விமர்சிப்பதை வாடிக்கையாகக் கொண்டவர். இதனால் மாரிதாஸிற்கு எதிராக பலரும் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகின்றனர். அந்த வரிசையில் பத்திரிகையாளர்கள் குறித்து மாரிதாஸ் அவதூறு பரப்பிய நிகழ்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும் தந்தை பெரியார் மற்றும் அவரது மனைவி மணியம்மை ஆகியோரை அவமதிக்கும் வகையில் பேசி, சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தார். சமீபத்தில், ஹெலிகொப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் உயிரிழந்த விஷயத்தில் தி.மு.க மீது அவதூறு பரப்பும் நோக்கில் சமூக வலைதளங்களில் பதிவிட்டதாக மாரிதாஸ் மீது தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புகார் அளித்திருந்தார்.

இதையடுத்து மாரிதாஸ் கைது செய்யப்பட்டு தேனி சிறையில் அடைக்கப்பட்டார்.

சபரிமலை:

சபரிமலை பக்தர்களுக்கு

## கட்டுப்பாடுகள் தளர்வு

சபரிமலையில் பக்தர்களுக்கு கூடுதல் தளர்வுகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

நீலிமலைப்பாதையில் பக்தர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். கொரோனா சூழ்நிலையை கருத்தில் வைத்து, கோவிலுக்கு வரும் பக்தர்களின் பயணத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனால் பாரம்பரியமான நீலிமலைப் பாதை மூடப்பட்டது. தரிசனம் முடித்த பக்தர்கள் உடனடியாக நிலக்கல் திரும்பி விட வேண்டும். இது போன்ற கட்டுப்பாடுகளை தளர்த்தும்படி பக்தர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

நீலிமலைப் பாதையை திறக்காவிட்டால் அந்த வழியாக சபரிமலைக்கு செல்லப் போவதாக இந்து அமைப்புகள் அறிவித்திருந்தன. இந்நிலையில் கேரள தேவசம் போர்டு அமைச்சர் ராதாகிருஷ்ணன், முதலமைச்சரும் மார்க்சிஸ்ட் மூத்த தலைவருமான பினராயி விஜயனை சந்தித்த பின்னர், கூடுதல் தளர்வுகளுக்கு மாநில அரசு அனுமதி வழங்கியது.

சென்னை:

## ரஜினிக்கு கமல் வாழ்த்து

நடிகர் ரஜினிகாந்தின் 71 ஆவது பிறந்தநாள் நேற்று (12) ஆகும். அதனை அவரது இரசிகர்கள் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர்.

ரஜினி வீட்டுக்கு முன்பு குவிந்த இரசிகர்கள், கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். பல இடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

நடிகர் ரஜினிகாந்திற்கு அரசியல் கட்சி தலைவர்கள்,



பிரதமர் மோடி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், நடிகர் மம்முட்டி, சச்சின் டெண்டுல்கர் திரையுலகினர் எனப் பல்வேறு தரப்பினர் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன், நடிகர் ரஜினிகாந்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# சீமெந்து தட்டுப்பாட்டுக்கு டோக்கியோ சீமெந்தின் தீர்வு

சந்தையில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் சீமெந்தை சென்றடையச் செய்யும் துரித விநியோகப் பணிகளை டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சீமெந்து இறக்குமதியாளர்கள் பொதியிடப்பட்ட சீமெந்து இறக்குமதியை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து சந்தையில் ஏற்பட்ட தட்டுப்பாட்டை சீர்செய்யும் வகையில், உடனடியாக பொதியிடப்பட்ட சீமெந்தை இறக்குமதி செய்யும் பணிகளை டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆரம்பித்திருந்தது. அதன் பிரகாரம், நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களை சென்றடையும் வகையில் பொதியிடப்பட்ட சீமெந்தை குறைந்த விலையான ரூ. 1,275 என்பதற்கமைய விநியோகப் பணிகளை ஆரம்பித்துள்ளது.



சந்தையில் ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனத்தால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக டோக்கியோ சீமெந்து குழுமம், கடந்த மாதம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. நாட்டின் மாபெரும் சீமெந்து உற்பத்தியாளர் எனும் வகையில், திருகோணமலையிலுள்ள சீமெந்து உற்பத்தி ஆலை, எந்நேரமும் இயங்கிய வண்ணமுள்ளதுடன், நாடு முழுவதிலும் தடங்கலில்லாத விநியோகத்தை மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த அவசர ஏற்பாட்டு கோரிக்கையாக, 12,000 மெட்ரிக் தொன் சீமெந்தை இறக்குமதி செய்வதற்கு, விசேட ஏற்பாடுகளை டோக்கியோ சீமெந்து மேற்கொண்டிருந்தது.

டோக்கியோ சீமெந்து வழமையாக, கொழும்பு டேர்மினல் ஊடாக மாதமொன்றுக்கு இறக்குமதி செய்யப்படும் 30,000 மெட்ரிக் தொன் சீமெந்துக்கு மேலதிகமாக இந்த இறக்குமதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உள்நாட்டு நிர்மாணத் துறையில் எழுந்துள்ள கேள்வியை நிவர்த்தி செய்வதில், நிறுவனம் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில், டோக்கியோ சீமெந்து குழுமம் அண்மையில் தனது தொழிற்சாலை விரிவாக்கத்துக்கான அடிக்கலை நாட்டியிருந்தது. அந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும், 2023ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்திக் கொள்ளளவு மேலும் ஒரு மெட்ரிக் தொன்னால் அதிகரிக்கும்.

உள்நாட்டு பெறுமதி உருவாக்கத்தில் தொடர்ச்சியாக கவனம் செலுத்திவரும் டோக்கியோ சீமெந்து குழுமம், நாடு முழுவதிலும் காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு சீமெந்து விநியோகத்தை மேற்கொண்டு, தடங்கலில்லாத சீமெந்து விநியோகத்தை உறுதி செய்வதில் பங்காற்றுகின்றது. அதனூடாக தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னணி பங்காளர் எனும் நிறுவனத்தின் நிலையை உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது.

# Nestle’ Health Science அறிமுகம் செய்யும் Nestle’ BOOST Original

*Nestle’ Health Science* தனது சமீபத்திய தயாரிப்பான *Nestle’ BOOST Original* இனை அறிமுகம் செய்துள்ளது. இது வயது முதிர்ந்தவர்கள், ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்கான சமநிலை உணவுத் தேவையின் ஓர் அங்கமாக அமையத்தக்க ஊட்டச்சத்து நிறைந்த பானமாகும்.

*Nestle’ BOOST Original* தயாரிப்பானது, தசை வலிமையைப் பேணிப் பராமரிப்பதற்கு உதவும் புரதச்சத்தையும் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவும் விட்டமின் சி,டி, துத்தநாகம், இரும்புச்சத்து, கனியுப்புகள் உள்ளிட்ட 16 விட்டமின்களையும் கொண்டுள்ளது. அத்துடன் இது, குறைந்த அளவிலான கொழுப்பை கொண்டதுடன் குறைந்த அளவிலான ‘கிளைசெமிக்’ சுட்டெண்ணையும் கொண்டுள்ளது.

ஒரு வல்லுநர் அணியைக் கொண்டுள்ள குழுவான *Nestle’ Health Science*, மக்களின் வயது முதிர்ச்சியில் அர்ப்பணிப்புடன் உதவுகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் *Nestle’ Health Science* நிறுவனம் தினம்தோறும் பலவிதமான உயர்தரத்திலான ஊட்டச்சத்து தயாரிப்புகளை வழங்கி வருவதுடன், அவை புத்தாக்கத்துடனான அறிவியலின் அடிப்படையில் விரிவான ஆராய்ச்சியின் பின்னர் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

*Nestle’ BOOST Original* பானத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு கொழும்பு ‘ஹில்டன் றிஷிடென்ட்’டில் அண்மையில் நடைபெற்ற போது, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா, அங்கு உரையாற்றுகையில் “இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்குச் சேவைகளை வழங்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்ற நிறுவனமாக,



இடமிருந்து வலமாக: நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உபதலைவர் (பெருநிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் விவகாரம்) பந்துல கொடஹே, A.Baur & Co.Pvt.Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ரோல்:.ப் பிளேஸர், Nestle Health Science வியாபார முகாமையாளர் மது ஸ்ரீவர்த்தன, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உபதலைவர் (விற்பனை) ஜெகத்விதாஹே ஆகியோர் நிற்கின்றார்கள்.
(படப்பிடிப்பு: நிமல்சிறி எதிரிசிங்க)

மக்களின் வாழ்க்கைத் தரத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புத்தாக்கமான ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள *Nestle’ BOOST* இலங்கையில் அதிகரித்துச் செல்லுகின்ற முதிய தலைமுறையினருக்கு உதவும் என நம்புகின்றோம்” என்றார்.

*A.Baur & Co.Pvt.Ltd* நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்ற *Nestle’ BOOST Original* தற்போது நாடு முழுவதும் உள்ள சூப்பர் மார்க்கட்டுகள், கடைகள் பார்மசிகளில் 480 கிராம் அளவு கொண்ட பொதிகளில் கிடைக்கப்பெறுகின்றது. *A.Baur & Co.Pvt.Ltd* நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ரோல்ஃப் பிளேஸர் இங்கு ஊரையாற்றும் போது கூறியதாவது: “*Nestle’ Health Science* நிறுவனத்தின் நம்பகரமானதும் நீண்டகால சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக பங்காளராக, எங்கள் விநியோக வரிசையில் *Nestle’ BOOST Original*ஐ சேர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தத் தயாரிப்பு வகையால், ஏற்கெனவே நிரூபிக்கப்பட்ட சாதனையுடனான நற்சான்றுடன், *Nestle’ BOOST Original* வெகுவிரைவில் இலங்கையின் அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற நாமமாக மாறும். எங்கள் விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டுள்ள நிலையில், இன்று நாம் நாட்டில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட மற்றும் சிறந்த திறன் வாய்ந்த விற்பனை ஆளணியைக் கொண்டுள்ள நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கின்றோம். அவ்வாறே, *Nestle’ BOOST Original* தயாரிப்பை மிகவும் திறமையான முறையில் சந்தையில் நிலைபெறச் செய்யத் தயாராக உள்ளோம்” என்றார்.

அமெரிக்கா

# அமெரிக்காவை சூறையாடிய சூறாவளி

**70 க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு**



அமெரிக்காவின் கென்டக்கி, அர்கன்சாஸ் உள்ளிட்ட 5 மாகாணங்களில் வெள்ளிக்கிழமை (10) இரவு தாக்கிய சூறாவளியில் சிக்கி 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கென்டக்கி மாகாண ஆளுநர் ஆண்டி பெஷேர் தெரிவிக்கையில், "சூறாவளி தாக்கியதில் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது" என்றார்.

மேலும் வரலாற்றில் கென்டக்கி மாகாணம் எதிர்கொண்ட சூறாவளியிலேயே இது மிகக் கடுமையானது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா



## ஜூலியன் அசாஞ்சேவை நாடுகடத்தலாம்

லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள விக்கிலீக்ஸ் இணையதள ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சேவை, அமெரிக்காவுக்கு நாடுகடத்த பிரித்தானிய நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அமெரிக்க அரசின் இரகசியங்களை உளவு பார்த்த வழக்கில் விசாரணை மேற்கொள்வதற்காக அவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்த லண்டன் நீதிமன்றத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது. அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், அசாஞ்சேவை நாடுகடத்த அனுமதி மறுத்ததோடு, இது குறித்து இறுதி முடிவு எடுக்கும் வரை, லண்டன் சிறையில் அடைக்கப்பட்ட வேண்டும் என்றது. இந்நிலையில் குறித்த வழக்கை விசாரித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் அத்தீர்ப்பை இரத்துசெய்தது. இதன் மூலம், அசாஞ்சாவை அமெரிக்காவுக்கு நாடுகடத்துவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அகதிகளை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் விபத்து

**54 பேர் உயிரிழப்பு**

மெக்சிகோவில் அதிகளை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 54 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (09) அமெரிக்காவில் இருந்து மெக்சிகோவில் உள்ள சியாபாஸ் மாகாணத்தின் புறநகர் பகுதி நெடுஞ்சாலையில் பயணித்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இதன் போது அக் கனரக வாகனத்தில் 100 க்கும்மேற்பட்டோர் இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இவ்விபத்தில் 54 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 50க்கும் அதிகமானோர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துபாய்

## கோல்டன் பையனின் கடிகாரம் மீட்பு

'கோல்டன் பையன்' என்றழைக்கப்பட்ட ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரரான மரோடோனா, கடந்த வருடம் மாரடைப்பால் உயிரிழந்தார்.



இவருடைய மறைவிற்குப் பின்னர் டுபாயிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் பாதுகாப்பில் மரோடோனாவின் கைக்கடிகாரமும் பிற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், அண்மையில் மரடோனாவின் கைக்கடிகாரம் ஒன்று, அந்நிறுவனத்தில் இருந்து திருடப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து இது குறித்து அந்நாட்டுப் பொலிஸார் நடத்திய விசாரணையில், அக் கைக்கடிகாரத்தை குறித்த நிறுவனத்தில் பாதுகாவலராக பணியாற்றி வந்த இந்தியாவின் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த வாசித் ஹூசைன் என்பவர் திருடிவிட்டு இந்தியாவிற்குத் தப்பி சென்றுள்ளமை தெரியவந்தது.

இந்நிலையில் மத்திய புலனாய்வுத்துறை மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்நபரை அசாம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அக் கைக்கடிகாரத்தையும் மீட்டுள்ளனர்.

இக் கைக்கடிகாரம் இந்திய மதிப்பில் 20 இலட்சம் ரூபாய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரேஸில்

தடுப்பூசி செலுத்தியவர்களின்

## தகவல்களை அழித்த மர்ம நபர்கள்

பிரேஸிலின் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை முடக்கிய ஹக்கர்கள், கொரோனாத் தடுப்பூசி செலுத்தியவர்களின் தகவல்களை அதில் இருந்து அழித்துள்ள சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்ற இச்சம்பவத்தில் தகவல்களை திரும்பப் பெற வேண்டுமானால் அரசு தங்களை இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ளுமாறு ஹக்கர்கள் குறித்த சுகாதாரத்துறை இணையத்தளத்திலேயே பதிவிட்டுள்ளனர்.

எனினும், மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை எனவும் அழிக்கப்பட்ட அனைத்து தரவுகளும் தங்களிடம் உள்ளதாகவும் இணையதளத்தை விரைவில் மீட்டுவிடுவதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒஸ்திரியா

## "தடுப்பூசி செலுத்த மாட்டோம்"

**வியன்னாவில் போராட்டம்**





ஐரோப்பிய ஒன்றியத்தில் கொரோனா தடுப்பூசியைக் கட்டாயமாக்கிய முதல் நாடான ஒஸ்திரியா, அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல், 14 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி கட்டாயமாக்கப்படும் என அறிவித்திருந்தது.

மேலும், தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வதற்கு மறுப்போருக்கு, ஆரம்பக்கட்டமாக 600 யூரோ அபராதமாக விதிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஒஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் கொரோவுக்கு எதிராகக் கட்டாயமாகத் தடுப்பூசி செலுத்துவதை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 40,000 பேர் பேரணியில் கலந்துகொண்டதாகக் கூறப்படும் இப்போராட்டத்தில், தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் வீட்டிலேயே இருக்கும்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராகவும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத் தீவுகள்:

# இருபதுக்கு 20 தொடர் இன்று ஆரம்பம்

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, கராச்சியில் இலங்கை நேரப்படி இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஜேஸன் ஹோல்டர், ஷிம்ரோன் ஹெட்மயருக்கு இத்தொடரில் ஓய்வளிக்கப்பட்டதுடன், கெரான் பொலார்ட், பேபியன் அலன் ஆகியோர் காயம் காரணமாக பங்கேற்காததோடு, அன்ட்ரே ரஸல் அவுஸ்திரேலியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான பிக் பாஷ் லீக்கில் விளையாடுகின்ற நிலையில் பலவீனமானதாகவே மேற்கிந்தியத் தீவுகள் காணப்படுகின்றது.

அந்தவகையில், நிக்கலஸ் பூரான், ஷே ஹோப், டரன் பிராவோ, றொவ்மன் பவல் உள்ளிட்டோர் ஓட்டங்களைப் பெறுவதிலேயே மேற்கிந்தியத் தீவுகளின் பெறுபேறுகள் தங்கியுள்ளன.

மறுப்பக்கமான இவ்வாறானதொரு தொடரிலையாவது அதிரடியான ஆரம்பம் ஒன்றை பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம் சோதனை செய்வாரா என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தவிர, நியூசிலாந்து, இங்கிலாந்து ஆகியன பாகிஸ்தான் தொடரை இரத்துச் செய்த நிலையில், இத்தொடரின் பாதுகாப்பாக நடைபெறுவது அவதானிக்கப்படுவதாகக் காணப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் ஜுவென்டஸ் வெனிஸியா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், வெனிஸியாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியிருந்தது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை அல்வரோ மொராட்டா பெற்றதோடு, வெனிஸியா சார்பாகப் பெறப்பட்ட கோலை மட்டியா அரமு பெற்றிருந்தார்.

இந்நிலையில், உடினிஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் சமப்படுத்தியிருந்தது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸல்டான் இப்ராஹிமோவிச் பெற்றதோடு, உடினிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெட்டோ பெற்றிருந்தார்.

எல்.பி.எல்:

## வொரியர்ஸை வென்ற கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற கண்டி வொரியர்ஸுடனான மழையால் பாதிக்கப்பட்ட போட்டியில் டக் வேர்த் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுகளால் எட்டு பந்துகள் இருக்கத்தக்க நிலையில் ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஜஃப்னா கிங்ஸ்

கண்டி வொரியர்ஸ்: 94/2 (12.2/12.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அஸலங்க 44 (34), அஹ்மட் ஷெஷாட் 22 (19), மினோத் பானுக 20 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொய்ப் மலிக் 1/19 [3], மகேஷ் தீக்ஷன 0/26 [4], வனிடு ஹஸரங்க 0/16 [2], வஹாப் றியாஸ் 1/21 [2], சுரங்க லக்மால் 0/11 [1.2])

ஜஃப்னா கிங்ஸ்: 95/3



(8.4/10 ஓவ. ) (துடுப்பாட்டம்: திஸர பெரேரா ஆ.இ 29 (13), அவிஷ்க பெர்ணான்டோ 23 (12), ஷொய்ப் மலிக் ஆ.இ 14 (09), உபுல் தரங்க 13 (08), டொம் கொஹ்லர்-கட்மோர் 12 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: சஷிந்து கொலம்பகே 1/16 [2], பினுர பெர்ணான்டோ 1/15 [1.4])

போட்டியின் நாயகன்: ஷொய்ப் மலிக்

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸை கோல் கிளாடியேட்டர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## புத்தளம் கால்பந்தாட்ட சங்கத்தின் விஷேட கூட்டம்

■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் கால்பந்தாட்ட சங்கத்தின் செயற்குழு மற்றும் கவுன்சில் உறுப்பினர்களின் விசேட கூட்டம், நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்றது.

புத்தளம் நகர சபைத் தலைவரும், புத்தளம் கால்பந்தாட்ட சங்கத் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.



கால்பந்து துறையின் மேம்பாடு, நீண்ட கால கொரோனா வைரஸ் இடைவெளிக்கு பின்னர் புதிய தொடர்களை மீள ஆரம்பித்தல், அடுத்தாண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

மட்டக்களப்பு, நாகபுரம் விடியல் விளையாட்டு மைதான

# புனரமைப்பை ஆரம்பித்த வியாழேந்திரன்

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு, நாகபுரம் விடியல் விளையாட்டு மைதான புனரமைப்பை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

வியாழேந்திரனின் முன்மொழிவுக்கு அமைவாக மீள்குடியேற்ற அமைச்சால் இம்மைதான புனரமைப்புக்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் ஊடாக, குறித்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்கும் வேலைத்திட்டமானது பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் அடிக்கல் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

"இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் எனும் கோட்பாட்டுக்கு அமைய அவர்களது குறைகளை இனங்கண்டு அவர்களுக்கான தேவைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றி வரும் நிலையில், குறித்த பகுதி இளைஞர்களின் தேவை எம்மால் இனங்காணப்பட்டு தற்போது



இவர்களுக்கான விளையாட்டு மைதானத்திற்கு முதற்கட்டமாக நிதிகளை பெற்றுக்கொடுத்து ஆரம்பப் பணிகளை தொடக்கி வைத்திருக்கின்றோம். எதிர்காலத்திலும் இப்பகுதி இளைஞர்களுக்காக பல்வேறு செயற்திட்டங்களை பெற்றுக்கொடுக்க தயாராக இருக்கின்றோம்" என இந்த அடிக்கல் நாட்டலில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வியாழேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வாகரை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதாகரன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராஜாங்க அமைச்சரின் செயலாளர்கள், பிராந்திய இணைப்புச்செயலாளர்கள் உள்ளிட்ட விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், குறித்த திட்டத்தை தமக்கு பெற்றுக்கொடுத்தமைக்காக பிரதேச இளைஞர்கள் வியாழேந்திரனுக்கு நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 13 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.